**OS. No. 2 /2019**

D.W.3 - மணி

தேதி: 21.11.2022

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு தபால் வந்தது. அந்த தபாலை கொண்டு வரவில்லை. பிரதிவாதிகள் சொல்லி நான் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்கு வந்துள்ளேன். நான் சுங்கச்சாவடிக்கு அருகில் கட்டிய கட்டிடம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். அதன் புல எண் தெரியாது. கட்டிடம் கட்டிய இடத்தின் நீள அகலம் எனக்கு தெரியாது. என்னுடைய வாக்குமூலத்தில் தாவா சொத்தில் கட்டிடம் கட்டியதற்கு என்னுடன் பணிபுரிந்த நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு முருகன் மேஸ்திரியை மட்டும் தான் தெரியும். மற்றவர்களை தெரியாது. நான் கட்டிய கட்டிடத்தின் அளவு எனக்கு தெரியாது. தாவா கட்டிடத்தில் தலைமை மேஸ்திரி என்ற ஓதாவில் கட்டி முடித்தேன் என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். மெட்டீரியல் கான்டிராக்ட் ஒப்பந்தம் ஏதாவது பிரதிவாதிகளிடம் ஏற்படுத்திக்கொண்டதாக தேதி குறிப்பிட்டு என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மெடடீரியல்களை நான் வாங்கி தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் தேதி குறிப்பிடவில்லை. மெட்டீரியல் கான்டிராக்ட் ஒப்பந்தம் போடப்பட்டதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கான சிமெண்ட், இரும்பு சாமான்களை ஆற்காட்டில் இருந்து வாங்கினேன். எனக்கு கடை பெயர் தெரியாது. நான் மேற்படி பொருட்கள் வாங்கியதற்கான பில்களை என்னுடைய நிரூபண வாக்குமூலத்துடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கட்டிடம் கட்டியதற்கான பாக்கி தொகையை பிரதிவாதிகளிடம் கேட்டபோது தாவா சொத்து சம்மந்தமாக வாலாஜா நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு

இருப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள்.நான் பிரதிவாதிகளிடம் மெட்டிரியல் காண்டிராக்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் அதன் சம்மந்தப்பட்ட பில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் எந்த கடையில் பொருட்கள் வாங்கப்பட்டது என்று கடையின் பெயரை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் எனக்கு நீதிமன்ற வழக்குகள் இவ்வாறு வரும் என்று தெரியாது, தெரிந்திருந்தால் பில்களை எடுத்து வந்திருப்பேன். எனக்கு தாவா சொத்து எங்கிருக்கிறது என்று தெரியாது என்றும் நான் அங்கு எந்த கட்டுமான பணியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH